உ

சிவமயம்

# கமலநாதம்



கிளி/வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் கனடா, சிலாபத்தில் வசித்தவரும் மலேசியாவில் வாழ்ந்து வந்து அமரத்துவமடைந்திட்ட அமரர்

## திரு. கைலாயபிள்ளை கமலநாதன்

அவர்களின் சிவப்பேறு குறித்த

நினைவுமலர்

21-12-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
07-07-1964

விண்ணில்
22-11-2013

கிளி/வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் கனடா, சிலாபத்தில் வசித்தவரும்
மலேசியா வாழ்ந்து வந்து அமரத்துவமடைந்திட்ட அமரர்

# திரு. கைலாயபிள்ளை கமலநாதன்

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டு விஜய கார்த்திகை ஆனவெள்ளி ஆறதனில்
அபரபட்ச ஷஷ்டி திதிவதினில் - நீண்டபுகழ்
கமலநாதன் தன் குலதெய்வம் முனீஸ்வரனார்
பாதமது சென்றடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது அன்பு தெய்வத்தின் பாத கமலங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்



உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். - குறள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட எங்கள் அன்புத் தெய்வம் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து எம்மை மட்டுமல்ல, நமது தேச விடுதலைக்காக போராடி பெருமை சேர்த்து, தரணியில் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டிய பண்புநிறை தெய்வம்!

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு". இது தான் உலக நியதி என் செய்வோம் எத்தனை காலமானாலும் எங்கள் இதயம் உள்ளவரை எம் நெஞ்சங்களில் என்றும் தோன்றாத் துணையாய் வாழ்ந்திருப்பீர்கள் என்ற மனநிறைவுகளுடன் இவ்நினைவுமலரினை தங்கள் பாதக்கமலங்களில் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்பின் மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உறவுகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் சிவமயம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.
ஓம் ஓம் ஓம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

- திருமூலர்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## குரு ஸ்தோத்திரம்

குரு ப்ரம்மா குரு விஷ்ணு குருதேவா
மஹேஸ வரஹ
குரு சாஷாத் பர ப்ரம்மா தஸ்மை ஸ்ரீ
குருவே நமஹ
ஓம் கும் குருப்யோ நமஹ

# தேவாரம்

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளளையெருதெறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Om sivamayam***

*Aanaimugan Aru Mugan Ambikai Ponnampalavan*
*Jnana Guru Vanipatham Nadu*
*Om Om Om*

***Vinaayagar Vanakam***

*Ainthu karathanai aanai muhath thanai*
*Inthin ilampirai pohlum eitranai*
*Nanthi mahan thanai gnaanak kolunthianik*
*Punthiyil vaithth adi pohtu hinranae*
*-Thirumuular*

*Vaakundaam, nallamanamundaam maamalaraal*
*Nokkundaam mayninudangathau pookunu*
*Thupparthirumayni thumbikkaiyaan paadam*
*Thappaamal sarvar thamakku.*
*- Avvaiyaar*

***GURU STOTRUM***

*Guru Brahma Guru Vishnu Guru Deva*
*Maheswaraha*
*Guru saakshat Parabrama Thasai Shree*
*Guruve namaha*
*Om gum* gurubyo namaha

**THEVARAM**

Veitha Mothi Vennool Poondu Vellai Yeru Theri
Pootham Choolap Polia Varuvar Puliyin Uri Tholar
Nathaa Enavum Nakka Enavum Nanba Ena Nindru
Paatahm Tholuvar Paavam Theerpar Palana Nagarareh
-Thirugnana Sambanthar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாயின வாறுவிலக் ககலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறைஅம் மானே.

\- திருநாவுக்கரசர்

கருவுற்ற நாள்முதலாகவுன்
பாதமே காண்பதற்கு
உருகிற்றே னுள்ளமும் நானும்
கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால
வாயா திருவாரூரா
ஒருபற்றிலாமையுங் கண்டிரங்காய்
கச்சி யேகம்பனே.

\- திருநாவுக்கரசர்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே.

\- சுந்தரர்

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

\- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kootra- Yina- Vaaru -Vilaka -Kileer
Kodumai- Pala Seithana Naa-nariyane
Yetra-Yadikkaay Yeravum Pagalum
Pireyathu Vananguven-Eppoluthum
Thoahra-Then Vayitrina-Gambadiyeh
Kudorodhu Thodaki-Mudakki-Yida
Aatren-Adiyaen-Athikai-Kedila
Veeratthaaana-Thurai-Ammaneh
-Thirunavukarasar

Karuvutta naalmuthalavun
Pahthame kaanpathatkku
Urukitte nullamum naanum
Kidanthalan theyithntholinthen
Thiruvotti yooraa thiruvaala
Vaayaa thiruvaaruraa
Orupattilamaiyun kandirankaayi
Kachchi yegampane.
-Thirunavukarasar

Matru Pattenak kinri nin thirup
Pathamey manam pavithen
Petralum pirarnthen ini
Piravatha thanmai vantheythinane
Katraver tholu thethum seekarai
Yurit paandik kodumudi
Natravaa vunai naan marakinum
Sollum nah Namachivayaveh.
-Suntharar

Ponnaar menianeh pulitholai araikasaithu
Minnaar sensadai male milir konrai aninthavaneh
Mannneh mamaniyeh mala padiyul manickameh
Anneh unnai allal ini yarai ninaikeneh
-Suntharar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. - மாணிக்கவாசகர்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. - மாணிக்கவாசகர்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.
- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.
- சேந்தனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THIRUVASAGAM

Ammaiyae appaa oppilaa maniyae
Anpinil vilaintha aaramuthae
Poymmaiyae perukkip polyuthinaich surukkum
Puluththalaip pulaiyanaen thanakkuch
Semmaiyae aaya siva patham aliththa
Selvame sive perumaanae
Immaiyae unnaich sikkenap pidiththaen
Engkelyunthu aruluvathu iniyae
-Manickavasagar

Paal ninainthuutum thaayinum saalap
Parinthunii paaviyaenudaiya
Uuninai urukki ulloli perukki
Ulappilla aanathamaaya
Thaeninaich sorinthu puram puramthirintha
Selvamae sivapermaanae
Yaan unaith thodarnthu sikkenap pidiththaen
Engkeluntharuluvathu iniyae
-Manickavasagar

Mutthi nerri aariyaadha muurkkarodu muyalvaenai
Paththi nerri ariviththu pal(zh)a vinaihal paarum vannam
Chiththamalam aruviththu siva maaki enaiyaanda
Aththanenakkaruliyavaar yaar perruvaar achchoavae
-Manickavasagar

## THIRUVISAIPA

Katravar vilungum katpakak kaniyaik
Karaiyvilaak karu naima kadalai
Matravar ariya maanika Malayai
Mathippavar manamani vilakkai
Setravar purangal setraem sivanaith
Thiruvilli milai viitiruntha
Kotravan thannaik kandu kandu ullam
Kulira en kankulirnth thanavae -Senthanaar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன்... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை... கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு... பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய... முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சுவின் உறைரதம்
அச்சது பொடிசெய்த... அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை... இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள்... பெருமாளே.

- அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THIRUPALLANDU

Paalukku paalagan Veendi yaluthidap
Partkadal eenthaperaan
Maalukku chakaram andrarul seithavan
Manniya thillai-thannul
Aalikkum anthanar vaalkindra
Chittrampalamae idamaagap
Paalithu nattam payila-vallaanukkay
Pallaandu kooruthumae
-Senthanaar

## THIRUPPUHAL

Kaithala niraikani appomod avalpori
Kappiya karimugum adiperni
Katridum adiyavar putthiyil uraipava
Karpagam yenavinai kadithekum
Matthamum mathiyamum vaithidum aranmagan
Matporu thiralpuya mathayaanai
Matthala vayiranai uthhami puthalavanai
Mattavil Malarkodu panivenae
Muthamil adaivanai mutpada kirithanil
Mutpada eluthiya muthalvohnae
Mupuram eriseitha achivan urairatham
Achchathu poddiseitha Athithiraa
Atthuyar athukodu suppira manipadum
Appunam athanidai ipamaki
Akkura magaludan achchiru muruganai
Akkanam manamarul perumaalae
-Arunagirinathar


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறவாமற் பிறவாமல் எனையாள்சற்... குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத்... தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற்... குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காம... பெருமாளே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வலிமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலி வளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Iravaamat piravaamal enaiyalsat... kuruvaakip
piravaakith thiramaana peruvaalvaith... tharuvaaye
kuramathaip punarvoone kukanesat... kumaresha
karaiyanaik kilaiyone kathikama... perumale.

## Thirupuranam

Iravaatha inpa anpu vendip pin veendukinraar
piravaamai vedum meendum pirappundel unnai entum
maravaamai vendum innum vedum naan makilnthu paadi
aravaa neeyadum poothu un adiyin keel irukka entar.

Kalaiyatha kalvium kuraiyath vayathumoor
kapaduvaaraatha nadpum
kanrathh valimaiyum kunratha ilamaiyum
kalupiniyilatha udalum
saliyatha manamum anpakalatha manaiviyum
thavaratha santhanamum
thalatha keerthium maaratha vaarththaium
thadaikal vaaraatha kodaium
tholaiyatha nithiyamum koonaatha koolumoru
thunpamillatha vaalvum
thuyyanin paathaththil anpumuvip periya
thondarodu kooddukandaay
alaiyali arithuyilu maayanathu thankaiye
aathikada voorin valve
amootheesar orupakam akalatha sugapaani
arulvaami apiramiye.

## Vaalthu

vaanmukil vallathu peyika mali valam surakka mannan
koonmurai arasuseyka kuraivila thuyirkal vaalka
naan marai arangal onga nattavam velvi malka
menmai kol saivaneethi vilanguga ulagamellam.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

## சிவபுராணம்

திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணுறைந்து மண்ணுறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Manikkavasaka Suvamikal Aruli Siyitha

# Sivapuranam

### Thiruvakach Sirappu

Thollai irumpiravich soolum thalaineekki
allalaruth thanantham aakkiyathe ellai
maruva neriyalikkum vaathavoor enkoon
thiruva sagamennum then.

Namasivaya vaalka nathanthaal vaallka
imaippoluthum ennensil neengathaan thaal valka
kookali yanda kurumanithan thaalvallka
aakama makinin rannippan thaalvaalka
ekan anekan iraiva nadivaalka

Vekan koduththanda venthanadi velka
pirapparukkum pingnakanran poonkalalkal velka
puraththarkkuch seyoonran poongalalkal velka
karankuvivaal ulmakilun koonkalalkal velka
sirankkuviva roonkuvikkun siroon kalal velka

Esa nadipoori enthai yadipoori
thesa nadipoori sivanse vadipoori
neyaththe ninra nimalanadi poori
mayap pirapparukkum manna nadipoori
seerar perunthurainam thevanadi poori

Aaratha inpam arulu malaipoori
sivanavanen sinthaiyul ninra athanaal
avanarulale avanthal vanankich
sinthai makilach sivapura nanthannai
munthai vinaimuluthum oya vuraippaniyan

Kannuthalaan thankarunaik kankadda vanntheythi
ennuthat kedda elillar kalalirainsi
vinnurainthu mannurainthu mikkay vilankoliyay
enniran thollai ilathane ninpurunchi
poolla vinaiyen pukaluma ronrariyen


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உள்ளவென் னுள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pullakip poodayp puluvayi maramakip
palviruka makip paravaiyayp pampakik
kallay manitharayp peyayk kanankalayi
vallasura raki munivarayth thevaraych
sellaa ninravith thavar sangamaththul

Ellap pirappum piranthilaiththen empiruman
meyyeyun ponnadikal kandintu veedutten
ullaven nullaththul onkara may ninta
meyya vimala vilaippaka vethangal
iya venavoonki aalnthu akanra nunniyane

Veyyay thaniyay iyamana namvimala
poyya yinavellam pooyakala vantharuli
meygnana maki milirkinra meychsudare
egnanana millathen inpap perumane
agngnanan thannai akalvikkum nallurave

Aakkam alaviruthi illay anaiththulakum
aakkuvay kappay alippayi arul tharuvay
pookkuvay ennaip pukuvippay ninthulumpin
nattaththin neriyay seyay naniyane
mattam manankaliy ninta maraiyoone

Karanthapal kannalodu neykalanthat poolach
siranthadiyar sinthanaiyul thenuri nintu
pirantha pirapparukkum engal peruman
nirankaloor inthudaiyayi vinnorkal etha
marainthirunthayi emperuman valvinaiyen thannai

Marainthida moodiya maaya irulai
arampavam ennum arunkayittal kaddip
puranthol poorththenkum pulualukku moodi
malan soorum onpathu vayit kudilai
malankap pulanainthum vansanaiyaich seyiya

Vilanku manaththaal vimala unakkuk
kalantha anpakik kasinthul urukum
nalanthan illatha siriyetku nalki
nilanthan mel vantharuli neelkalalkal kaddi
nayit kadaiyaayik kidantha adiyetkutha


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றேன்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thayit sirantha thayavana thaththuvane
masatta soothi malarntha malarsudare
thesane thenar amuthe sivapurane
pasamam pattaruththup parikkum aariyane
neesa arul purinthu nensil vansankelap

perathu ninra pirunkarunaip perare
arr amuthe alavilap pemanee
oorathau ullaththu olikkum oliyanee
neeray urukkayen aaruyiray ninraane
inpamum thunpamum illanee ullanee

Anparukku anpane yavaiyuma yallaiyumay
soothiyane thunnirule thonrap perumaiyane
aathiyane antham naduvaki allane
eerththennai aadkonda enthai perumanee
koorththmey gnanaththal kondunarvaar thankaruththin

Nookkariya nookke nunukkariya nunnunarve
pookkum varavum punarvumilap punniyanee
kakkum em kavalanee kanpariya peroliye
aattinpa vellame aththa mikkay ninta
thottach sudatoliyaych sollatha nunnunarvay

Mataamaam vaiyakaththin vevere vantharivaam
thettane thettath thelive en sinthanaiyul
uttana unnar amuthe udaiyane
vettu vikaar vidakkulmpin udkidappa
aattenum iya araneyoo vententu

Poottip pugalthirunthu poyikeddu meyyanaar
meedinku vanthu vinaippiravi sarame
kallap pulakkurampaik kaddalikka vallane
nalliravil naddam payinradum nathanee
thillaiyud koothane thenpandi naaddane

Allat piravi aruppane oventu
sollat kariyanaich sollith thiruvadik kilch
solliya paddin porulunarnthu solluvar
selvar sivapuraththin ullar sivandik kilp
pallorum eeththap paninthu.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
முருகா

# கந்தர் சஷ்டி கவசம்

திருப்பரங்குன்றுறை தீரன்

## முதலாவது கவசம்

காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்ப்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந்தனை.

## நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்குள் குருபரா ஏரகப் பொருளே
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே
ஓய்யார மயில்மேல் உகந்தாய் நமோநமோ
ஐயா குமரா அருளே நமோநமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோநமோ
பழநியங் கிரிவாழ் பகவா நமோநமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோநமோ
விராலி மலையுறை விமலா நமோநமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோநமோ
சூரசம் காரா துரையே நமோநமோ
வீரவே லேந்தும் வேளே நமோநமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோநமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோநமோ
கோழிக் கொடியுடைக் கோவே நமோநமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோநமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வாராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்து நீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேலூர்
தவக்கதிர் காமம் சார்திருவேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொருளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பத்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அறியயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த் தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடைஉன்னை
அல்லும் பகலும் ஆசா ரத்துடன்
சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## கந்தர் சஷ்டி கவசம்
## செந்தில் மேய கந்தவேள்
## இரண்டாவது கவசம்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலேன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியிற் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செகண செகண
மொகமொக மொகமொக மொக மொக மொகென
நகநக நகநக நகந நகென
டிகுகண டிகுடிகு டிகுகண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலபர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பதிருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாவிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிறமநாஹதரும்
அடியனைக கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியம் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்க சொக்கு சூர்ப்பைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
ஏறியடி விஷங்கள் கடித்துய ரங்கம்
கடிவிட விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைததாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் என்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பாதம் பெறவே உன்னரு ளாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலங்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்ட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணிந்த கையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலி ருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள எந்தன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## கந்தர் சஷ்டி கவசம்
## பழநிப் பதியொளிர் பரமன்
## மூன்றாவது கவசம்

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலவர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம்வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக்க குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ(து) அமர்ந்த(து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியை
சால முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற் கோணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேஸ்வரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆசை வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்காய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதல்
ஆறு முகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நகரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
ஆதிசயம் என்றுன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறுமுகம்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வாழ்த்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்(கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வேட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரி நடுநடுங்க
புதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்திக் தூளுதூளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் எம்முன்னே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட்சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் சஷ்டி கவசம்
## திருவேரகத்துறை பெருமான்
## நான்காவது கவசம்

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தொழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமரா
சித்தர்கள் போற்றும் தேசிகர் போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி
திரியாட் சரத்தால் சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யுற்றவனே
சதுரட சரத்தால் சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும அமர்ந்த மார்பும்
ஆறுரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
ஆரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்கள்பன் னிரண்டில் கதிரும் ஆயுதத்தால்
தரங்குலைத்(து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகனருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொள்ளாக் காட்சி காட்டிய சாடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தெய்வமாய் விளக்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்கரம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னை
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிபே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியொடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் சஷ்டி கவசம்
## குன்றுதோறாடும் குமரவேள்
## ஐந்தாவது கவசம்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வன்
குணபதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நலியும் சராபன்றி மலையும்
பண்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப்பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வாநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈசுவரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பினம் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்தி கேயா எனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தூவிய தகரேறு சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலகனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலம் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புழுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத் தூரியும்
வல்புரிச் சங்கொளி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிக் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பயிரவர் ஆனந்தமாட
துஷ்ட மிகுஞ்சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் செசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அனேக
பூதம் அடிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியர் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன்மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கத் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குலத்தை அறுத்துச் சயித்து
விடதவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மாலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந்(து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள்சண் முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் சஷ்டி கவசம்
## பழமுதிர் சோலைமலை கிழவோன்
## ஆறாவது கவசம்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருமகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென்றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங்
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீர வாகுவோ(டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மமதையைப் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண்டி தனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமகளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதிரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடும்
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ வமரர்கள் தமக்குச்
சேனா பதியாய் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பொருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புற பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பாத்(து) எனையாள் கார்த்திகே யாஎன்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமிவாழ் அருளெகனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான் செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சங்கத் தமிழ்த்திறம் தந்தருள்வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்த்தரும் அரசே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கைடக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதங் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாராது இடர்.

படிக நிறமும் பவளச் செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் பாடல்கள்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

நாலாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினோறாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பன்னிரண்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினான்காம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

திருப்படி பதினெட்டும் சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைச்சரிதம்

துஞ்சுமேதி சுறாக்களிற் பாய்விழச்
சுறாக்கள் ஓடிப்பலாக் கனிகீறியே
இஞ்சிவேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழமண்டல நாடதின் சிரசென
தமிழர்கள் வாழ்ந்திடும் யாழ்குடாநாட்டின்
மேற்கு மாக்கடலினில் அமைந்துள்ள
தீவுகள் கூட்டத்தில் தூரத்தே அமைந்த
பாற்தீவு, பசுத்தீவு, மூலிகைத் தீவெனப்
பலவகைப் பெயரினில் அழைத்திடும்
நெடுந்தீவில் நல்லநீரினை
எல்லோர்க்கும் வழங்கிடும் சாறாப்பிட்டியெனும்
பெயரினைக் கொண்ட வீதியில் அமைந்த
அரசடித்தோப்பெனும் பெயருடை
காணியிற் பாசமாய் வாழ்ந்த
இருமரபும் தூயஉயர் சைவவேளாளர்
தனிநாயகமுதலியார் வழித்தோன்றல்
வைத்திலிங்கம் நாகாத்தைப்பிள்ளை
இருவர்க்கும் பிறந்த நவஜீவனத்தில்
இரண்டாவதாய் உதித்த கண்ணியம்
மிக்கவர் கைலாயபிள்ளை.

தென்னையும் பனையும் தீங்கனி வாழையும்
பணப்பயிராம் புகையிலைச் செய்கையும்
சிறுதானியமும் செய்து வளர்ந்த
ஐயனார் ஆலயம் அமைந்த அனலைதீவின்
சுந்தரபுரிசன் சுப்பிரமணியரும்
நங்கை நல்லாள் நாகம்மா அவர்களும்
இணைந்தே பெற்றவர் தங்கம்மா.

இவர்கள் இருவரும் காதலால் இணைந்து
கிளிநொச்சி அஞ்சலகப் பணியும் பெற்று
வனப்புமிகு வட்டக்கச்சியில் வாழ்விடம் அமைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் இயற்றி நல்லறம் அமைத்து
வளமுடன் வாழ்ந்த வாழ்க்கைக்கு
அர்த்தமாய் உதித்தவர் எண்மர்.

அட்டநல் மணிகள் நடுவே ஆறாவது மகவாய்
நல்லோர் வியக்கும் நயத்தகு குரிசிலாய்
நன்னாள் 07.07 1964 இல்மடிமிசை
தவழ்ந்தவன் கமலநாதன்.

குழந்தையின் துடிப்பில் குதூகலமெய்திய பெற்றோர்
அடிபிறகோடி அவன் நிழலது தொடர்ந்து
ஐந்து வயதினில் அரிவரி புகட்டி
ஏற்புடைக் கல்வி பெறும் வழிகாட்டி
வளர்கவென வளர்த்து வனப்பது தந்தனர்.

கிருஷ்ணவேணி, தனலட்சுமி,
வசந்தவேணி, கமலவேணி,
எனும் நான்கு பெண்களையும்
ரகுநாதன், சேதுநாதன், ரவீந்திரநாதன்
எனும் மூன்று ஆண்களையும்
உடன்பிறப்பாய் கொண்டு
குறும்போடும், துடிப்போடும் அனைவர் அன்பும்
பெற்றவனாய் வளரலானான் கமலநாதன்.

சுறுசுறுப்பேச்சாலும் குரு குருப்பார்வையாலும்
இயல்புமாறா இரக்கமேன் குணத்தாலும்
அயலவர் உறவினர் ஊரார் மனங்களில்
தனியிடம் ஒன்றைத் தனதாக்கிக் கொண்டான்

இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தில்
ஆரம்பக்கல்வி பயின்றுவரும் நாளது தன்னில்
அக்காலநாட்டு நிலையும் மாந்தர்
பெற்ற அல்லோலகல்லோல அசாதாரண
நிலையும் கண்டு இவன் இங்கு இருந்தால்
அவன் எதிர்காலம் கெட்டுவிடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவுணர்ந்த பெற்றோரும்
எண்பத்துமூன்றில் வெளிநாடனுப்பி
புதுவாழ்வு கொடுத்தனர்

ஜேர்மனி, கனடா, ஞாலங்கள் சுற்றியும்
தாயகத்தில் தனிஈழம் அமைப்பது காலக்கடன்
எனவுணர்ந்து திரும்பவும் ஈழம்வந்து
பயிற்சி பெற்று போராளியாகினான்.

அல்லும் பகலும் அயராது உழைத்து
தேசநலன் ஒன்றே மூச்செனக்கருதி
தன்னலம்கருதா பொதுநலவாயனாய்
இனத்துக்காய் தன்னை அர்ப்பணித்த வீரனானான்.

அமைதி காக்கவென நாட்டுக்குள் நுழைந்து
அராஜகம் புரிந்த இந்தியப்படைக்கு
கடும்குடைச்சல் கொடுத்த புலிப்படையின்
பெயர்சொல்லும் தனிப்புலியாய் அறியப்பட்டான்.

பலமிகு இராணுவத்தாங்கியை சத்தார்ப்பாலத்தில்
தனியாளாய் தகர்த்து இராமாயணத் தொடர்ச்சியாய்
இலங்கா புரியழிக்க வந்த இந்தியக் குரங்குகள்
பதினெண்மரை பரலோகம் அனுப்பிவைத்தான்.

ஆப்பிழுத்தகுரங்கென வன்னிக்குள் மாட்டிநின்ற
இந்தியப்படை இவன் குடைச்சல் பொறுக்காது
ஆற்றாமையால் இட்டபெயர் "பக்கி".

எதிரியின் வசைமொழியே
இவனுக்கான புகழ் மொழியாய்
"பக்கி" எனும்நாமம் விடுதலை விரும்பும்
மக்கள் போற்றும் விசித்திர நாமமானது.

தாயை நேசிப்பவனே தாய்நாட்டையும்
நேசிப்பானெனும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்னிகரற்ற தமிழ்த்தலைவன் வாக்கிற்குத்
தகுந்தாற் போல்தன் தாயின் வேண்டுதலால்
விடுதலைக்கான தன் நேரடிப்பங்களிப்பை
சிலகாலம் ஒத்திவைத்து மீண்டும்
வந்தான் கொழும்பிற்கு.

இலங்கை உச்சநீதிமன்றத்தில் இவன் மீது பாய்ந்த
அத்தனை சட்டக்கத்திகளையும் உவகையோடு
ஏற்றுக்கொண்டு சிறைவாசமும் அனுபவித்தான்.

தொண்ணூற்று நான்கில் சிலாபம் நகரில்
பிரசித்தி பெற்ற முனீஸ்வரர்
ஆலயத்தருகே சோர்வின்றி வாழ்ந்த
சோமஸ்கந்தன் தர்மாவதி அவர்களின்
அன்புமகள் சற்குணவதியாம்
சாரதா அவர்களைத் திருமணம் புரிந்து
சிறப்புடன் வாழ்ந்தார், சான்றோர்க் குதவினார்

முனீஸ்வரன் அருளினால் ரவீனா பிறந்தாள்
அன்பாய் வளர்த்தனர் அருங்கலை பயிற்றினர்
இரண்டாவது பிள்ளையாய் ஹர்சனைப் பெற்றனர்
கவலைகள் அற்று வாழ்ந்தனர் பெற்றோர்
பெருமை பாராட்டப் பிறந்தான் பிரதீபன்
இவர்கள் அனைவரும் பாதுகாப்புக் கருதி
மலேசியா சென்று மகிழ்வாய் இருந்தனர்.

இத்தகு நாளில் தான் தீராதநோய் வந்து
நோயறியா கமலநாதன் படுக்கையில் சாய்ந்தான்
பலநூறு இன்னல்கள் உயிர்பறிக்கும்
சவால்களை எல்லாம் பொடியாக்கி மீண்டவன்
காலனோடும் போரிட்டு மீள்வான்என
நம்பிக்கையோடு மருத்துவம் செய்தனர்
மகத்துவமான அவன் உறவுகள்
இதோ இன்றோ நாளையோ என்று
உயிர்பறிக்க வந்த காலனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடிக் கொண்டிருந்தான்
வாரங்கள் பல தொடர்ந்தது போராட்டம்
இறுதியில் வென்று விட்டான்
கொடுங்கோலன் காலனவன்

இனம் போற்றும் மாவீரர் வாரமதன் இரண்டாம் நாளில்
நவம்பர் 22, 2013 இரவு 9.47 மணியளவில்
மனைவி மக்கள் பரிதவிக்க, குடும்பத்தார் கதறியழ
விடிவு வேண்டிஅரற்றும் தமிழ்த்தாயும்
தன்மானக் குலமகனைக் காக்க
ஈனக்காலனிடம் கை ஏந்த
காற்றுக்கும் கட்டுப்படாத விடுதலை மூச்சு
விடைபெற்றது இப்பூவுலகை.

ஒருதாய்க்கு மைந்தனாய் இத்தரணியில் உதித்தமகன்
வீரத் தமிழ்த்தாயின் புதல்வனாய் வாழ்நாளைக்
கழித்தமகன் இயற்கையின் ஆணையேற்று
பூமித்தாயை முத்தமிட்டான்.

சிவாயநம வினைச்சேருடல் தெளிந்து
அவயமதுவே அவன் கழலடியென
பாவினை களைந்து எல்லாம் வல்ல
கமலத்தாழ்களில் கமலநாதனும்
சவமது களைந்துநற் கழலேகினான்.
நீரியல் வாழ்வு நிலைத்திடாதென்ற
பேரியலுண்மையை உணர்ந்து தேற்றுவோம்.

ஓம்சாந்தி....சாந்தி...சாந்தி..!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெற்றவர்கள் புலம்பல்

ஆறாவதாய் வந்துதித்த ஆருயிர் செல்வமே
பெற்ற மனம் கலங்குதையா
பேதை உள்ளம் வெறுமை ஐயா
எமக்கான கடமைகளை நீ செய்யும் காலத்தில்
உனக்கான கடமைகளை நாம் செய்ய வைத்தனையோ?

தெரிந்தவர்கள் பலருக்கு புரியாத புதிர் நீ
புரிந்தவர்கள் அறிவுக்கு இனம்காத்த கதிர் நீ!
நாடு விட்டு நாடு சென்றால் நலம் காண்பாய்
எண்றெண்ணி நாமுன்னை அனுப்பி வைத்தால்
தாய்நாடு திரும்பி வந்து நாடு மீட்கப் போராடினாய்!

போராட்டம் உனக்குப் பிடித்துப் போனதாலோ என்னவோ
போராட்டத்திற்கும் உன்னைப் பிடித்துப் போனது போலும்

சுதந்திரக் காற்றுக்காய் ஆயுள்வரை போராடிய நீ
சுவாசக் காற்றுக்காய் காலனிடம் போராடினாய்
கடைசி மூச்சு வரை மீட்சிக்காய் போராடினாய்
காலன் வென்று விட்டான் முதன் முறையாய்
நீ தோற்று விட்டாய்
பிறர் பசி பொறுக்காத நீ உன் பசி அறியாது
இருந்தாயேடா
ஆறவில்லை பெற்ற மனம்!
எம் உயிருள்ள காலம்வரை உள்ளத்தால் உனைப்
போற்றுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவிபுலம்பல்

கைப்பிடித்தநாள் முதலாய்
கண்ணுக்குள் வைத்தென்னை
பிள்ளைகள் மூவருடன்
என்னையும் ஓர் பிள்ளையாய்
காத்துவந்த காதலரே!

கடைசிவரை இவ்வாறே வாழலாம் என்றிருந்தேன்
கனடா கொண்டு செல்ல மலேசியா வரவழைத்தீர்
கனடா செல்வதற்கு வழிவகைகள் வந்ததுமே
தனியாய்த் தவிக்கவிட்டு தரணியில் மறைந்தீரே!

கடைசி மூச்சுவரை சாரதா என்றழைத்த
ஒலியைத்தான் மறப்பேனோ?
உங்கள் பிள்ளைகள் அப்பாவிற்கே அடக்கம்
இனி அப்பா இன்றி எப்படி வளர்த்தெடுப்பேன்

ஈரைந்துமாதங்கள் வயிற்றில் சுமந்து
ஆறெட்டுவருடம் நெஞ்சில் சுமந்த உங்கள்
அம்மாவை விட்டுச்செல்ல மனது ஏகியதோ?

அம்மா என்றழைக்கும் அமுதமொழி கேளாது
தள்ளாதவயதில் நொந்து தவிப்பது தெரியலையோ?

உற்றார் உடன்பிறப்புகள் அழும் குரல்
உங்கள் காதில் விழவில்லையா?
எப்பிறப்பில் இனியுங்கள் இனியகுரல் நாம்கேட்போம்
ஏங்கித் தவிக்கின்றோம் எழுந்து நீங்கள் வருவீர்களா..?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பிறப்புகள் புலம்பல்

எம்மவர்கள் எட்டுப் பேர்
ஆண், பெண் சமதொகையாய்
ஒருகூட்டில் வாழ்ந்தோமையா !
கூடுவிட்டுத் திக்கொன்றாய் திசைவேறாய் பிரிந்தாலும்,
கூறுபட்டுப் பிரியாமல் கூட்டாய்த் தானே
இணைந்திருந்தோம் !
எழுவரையும் அழவைத்து நீ மட்டும் எங்கு சென்றாய்..?

குடும்பத்தில் நீ ஒரு வித்தியாசப் பிறவியடா
குலை நடுங்க வைத்து விட்டு எங்கே தான் சென்றாயடா?

உடன்பிறந்தோர் உன்மீது உயிரையே வைத்திருந்தும்
உன் உயிரைக் காக்க தம்மையே அர்ப்பணித்த
உயிர்ப்போரை உணர்ந்திருந்தும்
இரக்கமற்ற இறைவனுக்கு அப்படியென்ன அவா
எமை விட்டு உனைப் பிரிக்க ?

வீரப்புலியாகி எதிரியைக் கலங்கடித்த உன் வீரம்
இந்தியன் ஆமியை கிலிபிடிக்க வைத்த உன் தீரம்
அத்தனையும் காலனிடம் தோற்றுப் போனதோடா?

'கமலநாதன் வீழ்ந்துவிட்டான்' 'அன்புத் தம்பி
இறந்துவிட்டான்'
இன்னும் தான் மனம் ஒப்பவில்லை!

எம் பலமெல்லாம் உன்னுடனே எடுத்துச்சென்றாய் தம்பி
சிறகொடிந்த பறவையென கலங்குகிறோம் வெம்பி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

அப்பாவி மக்களாய் நாம் அவதரித்தோம் என்றா நீ
நட்டாற்றிலெமை விட்டு காலனோடு கலந்துவிட்டாய்
தப்பென்ன செய்தோம் இத்தரையில் தவிப்பதற்கு ?
செப்புங்கள் அப்பா இனி எப்பிறப்பில் உமைக்காண்போம்?

தப்பாக நாம் எண்ணவில்லை கடைசிமூச்சுள்ளவரை
காலனோடு போராடிமுடியாமல் போனதை
எம் நெஞ்சுமறக்காது
அப்பாவின் ஆசைகள் நாமறிவோம்
தப்பாமல் செய்துதரணியில் வாழ்வோம் அப்பா
எளிமையான வாழ்வுதனை வாழ்ந்து காட்டினீர்கள்
ஏற்றமுடன் நாம் வாழ உங்கள் ஆசிவேண்டுமப்பா

## எம்அன்புமாமாவிற்கு!

தாயோடு உடன்பிறந்த தாய்மாமன் நால்வருள்
நாமறிந்த முதல்மாமா எங்கள் கமல்மாமா
மீதமுள்ளோர்நாடுவிட்டுநாடுசெல்ல
பாசமென்றால்என்னவென்றுஉங்களிடம்கற்றுக்கொண்டோம்

உங்கள் துடுக்குத்தனம் பிடிக்கும்
வீரம், தன்னலமற்றவாழ்வு, பிடிக்கும்
அனைவருடன் அன்பாய்பழகும் நற்பண்புபிடிக்கும்
நாட்டை நேசிக்கும் கடமை பிடிக்கும்
தன்னை நேசிக்காத ஒன்றைத்தவிர
அத்தனையும் பிடிக்கும்

விடுதலைக்கு உழைத்ததற்காய் சிறைவாசம் சென்றீர்கள்
மகசீன் சிறைக்கதவும் எங்களுக்குக் காட்டினீர்கள்
உயர்நீதிமன்றத்திலே குற்றவாளிக் கூட்டிலேறி
உண்மையை ஒத்துக்கொண்ட கம்பீரம் யாருக்குவரும்?
எதிரியோடும் தெரியாரோடும் சாமர்த்தியமாய் பழகியே
காரியத்தை ஆற்றும் சாமர்த்தியசாலி நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நோயுற்று அறிந்ததில்லை
வந்தநோய் கொடியநோய் என்றறிந்து அதிர்ந்து போனோம்
மருத்துவ வசதியுள்ள நாடு மலேசியா
காப்பாற்றலாம் என்றார்கள் மனதை தேற்றினோம்
கடைசியிம்மிஞ்சியது ஏமாற்றம் மட்டுமே !

கமல்மாமா இன்றில்லை என்றெண்ணத் தோன்றவில்லை
மீண்டுமொரு பிறப்பிருந்தால் வந்திடுங்கள் எங்கள் வீட்டில்!

## மைத்துனர், மைத்துனி புலம்பல்

அஞ்சலி செய்திட கண்ணீர் வழியே
சிந்திட துளிகளைச் சென்றீர் எங்கே - உடன்
செப்புவீர் கமலநாதா! செயலற்று இங்கே
வெந்திடப் பலரும் வேதனைத்தீயில் - உமக்கு
விரைந்துமே திறந்ததேன் மரணவாயில்
தந்தனை உயிரை தவித்திட உறவே - யாரும்
தாங்கிட இயலா உமது மறைவே!

வந்தவர் எல்லாம் போவது உண்மை - இது
வாழ்வியல்! உலகில்! இயற்கைத் தன்மை
சிந்தனை அறிவில் தோன்றியபோதும் - நெஞ்சில்
செப்பிட இயலாதுயரே மோதும்
உந்தனை இழந்த உணர்வேமிஞ்சும் - என்றும்
உள்ளத்தில் உமது நினைவேதுஞ்சும்
வந்தனை செய்வோம் வாழும் வரையில்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்பிறவாச் சகோதர சகோதரிகள் புலம்பல்

நிமிர்ந்த நடையும் நீறுகொண்ட நெற்றியும்
வருந்தி நாம் அழைத்தாலும், வருவீரோ
எங்கள் அண்ணா!
ஒன்றாய் நாமிருந்து ஒரு தட்டில் உணவருந்தி
இருந்த காலத்தை மறப்போமா
எங்கள் அண்ணா!

அஞ்சா நெஞ்சம் கொண்ட எம் அண்ணாவே,
காலன் கூட உம்மை அல்லல்பட்டே அணைத்திருப்பான்
மலைபோன்ற உம் வாழ்வு மண்ணான
அன்நோயால் மடிந்து சென்றதுவோ!

தொட்டு நாம் பார்க்கவில்லை துடைத்தோ விடவுமில்லை
ஆசைதீர நாம் அருகிருந்து பார்க்கவில்லை
நிலையில்லா இவ்வுலகில் நிலைகுலைந்து நிற்கின்றோம்
எங்கள் அண்ணாவே நீர் எங்கு சென்றீர்

வருவது மெய், நாம் போவதும் மெய்
வாழ்வில் இது நியதி - ஆனால் நீர்
மெல்லத் தலையசைத்து, மிளிர்கின்ற புன்சிரிப்பும்
நல்லவை செய்து, நானிலம் சிறக்க வைத்த - எம்
உடன்பிறவாச் சகோதரனின் பிரிவைத் தாங்காது என்றும்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிறேமா, இந்திரன், ரூபன், பவானி, கிருபா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்கள் புலம்பல்

பூஞ்சோலையடா உன் மனது
பெரும் சோகமடா உன் பிரிவு

அஞ்சாத உன் குறும்பு
விஞ்சும் உன் துடி துடிப்பு
வழமை மாறா உன் இயல்பு
நினைவில் மறையா இவைகளினால்
நெஞ்சு கனக்கும் வலி கொண்டோம்!

கள்ளமில்லா உன் முகத்தை
கடைசியாய் ஒருமுறை கட்டிலிலே காணவும்
கொடுப்பினையின்றி கலங்கி நின்றோம்!

மாதவம் செய்தவன் நீ ஒருமுறை மரணித்தாய்
மாபாவம் செய்தவர் நாம் நினைவு வரும் நேரமெல்லாம்
அணுவணுவாய் இறக்கின்றோம்!

சுதந் திரப் பறவையாய் வலம் வந்து
சிட்டுக் குருவியென சிறகடித்து
எந்நாளும் எம் மனங்களில் சித்திரமாய் வாழ்பவனே!

நித்திலத்தில் நீ சாகவில்லை
நித்தியமாய் வாழ்கின்றாய் நண்பர்கள் நெஞ்சத்தில்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
882, ஆறுமுகம் வீதி
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
தொலைபேசி : 021 3207584, 021 2280024
தொலைநகல் : 021 2221595, 021 2280024
கைபேசி : 077 6913244
மின்னஞ்சல் : shritharan08@hotmail.com
இணையத்தளம் : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi.
Tel. : 021 3207584, 021 2280024
Fax. : 021 2221595, 021 2280024
Mob : 077 6938244
E.mail : shritharan08@hotmail.com
Web : www.shritharan.com

**வீரமறவனுக்கு** ............................

வந்தாரை வாழ வைத்த இயற்கை எழில் கொஞ்சும் வட்டக்கச்சி மண்ணில் பிறந்து எங்கள் உறவுகளோடும், மண்ணோடும் தன்வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்ட கைலாயபிள்ளை கமலநாதன் (பக்கி) அவரின் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். அண்மையில் நான் மலேசியா சென்ற போது அவரோடு அவருடைய வீட்டில் உணவருந்திய நேரங்களை நினைத்துப் பார்க்கிறேன். எங்கள் தமிழ்த்தேசத்தின் விடுதலை வரலாற்றில் "பக்கி" என்கின்ற நாமம் என்றென்றும் அழியாது. 80களில் இனத்தின் விடுதலைக்காய் புறப்பட்டவன் 88/89களில் இந்தியப்படை எமது மண்ணை ஆக்கிரமித்து இருந்த காலம் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிரான போரிலே சிம்மசொப்பனமாக விளங்கியவன் "பக்கி".

வன்னிக்காடுகளில், வயல்நிலங்களில், தெருவோரங்களில் அவனுடைய பாதம் படாத இடமே இல்லை என்று சொல்லலாம். கண்ணிவெடித்தாக்குதலுக்கு முதன் முதல் பாடம் கற்பித்தவன் பக்கி.

எம் மண்ணின் விடுதலைக் கனவுகளோடு வாழ்ந்தவன். 2012களின் நடுப்பகுதியில் அவனைத் தொற்றிக்கொண்ட புற்றுநோய் என்கிற மாறா வருத்தத்தோடு, தாயகம் விட்டு ஏகினான். தன் குடும்பத்தோடு மலேசிய மண்ணில் வாழ்ந்து நோயோடு போராடி இயற்கை எய்தினான்.

அவன் பிறந்த வட்டக்கச்சி மண்ணும், அவன் பழகிய நண்பர்களும், அவன் சென்று வந்த ஒவ்வொரு பகுதிகளும், எங்கள் ஊரின் தெருக்களிலே பேசிக்கொண்டே இருக்கின்றன. வட்டக்கச்சி புளியம்பொக்கணை செல்லும் பாதையில் சத்தார் பாலத்தைக்கண்டால் பக்கியின் முகம் தான் தெரியும். அப்படியான ஒரு வீரமைந்தனை இழந்த எங்கள் மண் சோகத்தோடு வாழ்கிறது. அவனது ஆத்மா சாந்தி பெறவும், தந்தை, தாய், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள், அமைதி பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

என்றென்றும் அவர் நினைவுகளுடன்,

*சி.சிறீதரன்,*
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ஈழவரலாற்றில்
# காலத்தால் அழியா மாவீரன்



தோற்றம் :07.07.1964 மறைவு: 22.11.2013

## அமரர்: கையிலாயபிள்ளை கமலநாதன்(பக்கி)

வட்டக்கச்சி என்னும் ஊரில் அவதரித்து ஈழமண்ணையும் மக்களையும்
ஆழமாக நேசித்து உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்க்கை நலன்களில்
பெரிதும் அக்கறைகொண்டவராகவும் உதவியாளராகவும் இருந்து
ஊர்மக்களோடு காலத்தால் அழியா மாவீரனாக வாழ்ந்து வன்னியில்
எதிரிக்கு சிம்மசொற்பனமாக திகழ்ந்து ஈழத்திலும் ஜேர்மன் கனடா
மலேசியா ஆகிய நாடுகளில் சிறப்புற வாழ்ந்து சிவபதம் எய்தியதால்
நாங்கள் கண்ணீரை உணர்வோடு இவர்பாதம் சமர்ப்பணம் செய்கின்றோம்

"காலத்தால் அழியா மாவீரன் விதைக்கப்பட்டவன்
மீண்டும் விடுதலைக்காய் விருட்சமாவான்"

அமரர் கையிலாயபிள்ளை கமலநாதன்(பக்கிரி)அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின் மனைவி பிள்ளைகள் மற்றும் உற்றார்
உறவினர் நண்பர்களோடு ஆழ்துயர் பண்புகாத்து ஆழ்ந்த அனுதாபத்தை
பகிர்ந்துகொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்

பக்கி என்றால் எதிரி நெஞ்சம் சொக்கிப்போகும்
என்றும் உன் ஞாபகங்கள் எங்கள் நெஞ்சோடு நிழலாடும்
வட்டக்கச்சி நண்பர்கள்

*There is nothing greater than the trust in humans* - *Thara Krish*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியொன்று ஓய்ந்தது



மலர்வு 07-07-1964 — உதிர்வு 22-11-2013

*அமரர் கையாலபிள்ளை கமலநாதன்*
(பக்கி)


கிளிநொச்சி வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் கனடா, சிலாபம், மலேசியா ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த கையாயபிள்ளை கமலநாதன் அவர்கள் 22.11.2013 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

விடுதலைப்புலி வீரனாய்
தேசியத் தலைவனின் செயல் வீரனாய்
சிங்களத்திற்கு சிம்ம சொப்பனமாய்
அமைதிப்படையென்ற ஆக்கிரமிப்பு படைக்கு
பாடம் புகட்டியவனாய்

நகைச்சுவை மிக்க நல்லாசானாய்
உருவத்தில் சிறியவனாய்
உணர்வில் உயர்ந்தவனாய்

ஊரவர் மனதில் உறைந்துவிட்டவனே – பக்கி
நீ பாக்கியமானவன் மாவீரர் மாதத்தில்
மறைந்தாயோ நீ மறைந்தாலும்
உன் போராட்டக் களமும் போராடிய விதமும்
என்றும் எம் மனதில் பசுமரத்தாணிபோல்
நிறைந்து நிற்கின்றது.

**உன் ஆத்மா சாந்தி பெற**
**ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.**



பிரிவின் துயரில் வாடும்
முன்னைநாள் போராளிகள் – பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1964 . 07 . 07



இறப்பு
2013 . 11 . 22

## அமரர். கமலநாதன் கைலாயபிள்ளை (பக்கி)

*(பிறப்பிடம்:- வட்டக்கச்சி, கிளிநொச்சி வதிவிடம்:- மலேசியா)*

கண்கள் கலங்குகிறதே
காற்று வீச மறுக்கிறதே
உன்மறைவுச் செய்தி கேட்டு
நெஞ்சு வெடித்து விடும்
போல் இருக்கிறதே
நேற்று வரை வாழ்ந்த
வாழ்க்கை இன்று
பாரை விட்டு போனதேனோ?

கதறி அழும் ~ உன்
உறவுகளுக்கு யார் இனி
ஆறுதல் சொல்வார்
மீண்டும் உன் வரவை
எதிர்பார்த்து
ஏங்குகிறோம்
கண்திறந்து பாராயோ?
கவலைகள் தான் தீராதோ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

**நிலையாமையே நிலையானது - கவியரசு கண்ணதாசன்**

அந்தக் குத்து விளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன. அவை எரிந்தாலென்ன, அணைந்தாலென்ன? அந்தப் படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்து விட்டது.

அது எரிந்து கொண்டிருந்தவரை, குத்து விளக்குகளுக்கு எண்ணை ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குக்கு ஊற்றும் எண்ணையை இறைவன் ஊற்றாமல் விட்டு விட்டான்.

மானுடத்தின் சாகசம் மரணப்படுக்கையோடு நின்றுவிட்டது. மனிதன் செய்த விளக்கைப் போல், எரியாவிட்டால் பத்திரப்படுத்தக் கூடிய நிலையில் அந்த உடம்பு இல்லை. நான்கு நாட்களில் அது நாறிப் போகும்.

நறுநெய் பூசி வைத்தாலும் அதிலிருந்து பூச்சி, புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்க முடியாது. அந்த மனிதன் அந்தகாரத்தில் கிடக்கிறான்.
ஆனாலும் அவன் தலை மாட்டில் இரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன.
அழுவாரையும் சிரிப்பாரையும் அறியமுடியாத சடலத்திற்கு அந்த விளக்குகள் எவ்வாறு உதவப் போகின்றன?

அந்த விளக்கை ஏற்றுவதும்,அணைப்பதும்,உங்கள் கைகளே, உங்கள் விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் எவனுடைய கைகள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞானிகளும், விஞ்ஞானிகளும் இங்கே தான் யோசிக்கின்றார்கள்.

"எல்லோருடைய விளக்குகளும் அணைய வேண்டியதே.

அவை எரிந்த காலத்தில் எத்தனை பேருக்கு ஒளி காட்டின என்பதே முக்கியம்.

சத்தியம் என்ற தாம்பாளத்தில் உங்கள் விளக்கை ஏற்றி வையுங்கள்.

குருடர் அல்லாதவர்களுக்கு அவை வழிகாட்டிடும். ஒரு கோவணத்தைக் கூட நீங்கள் கொண்டு வந்ததில்லை உங்கள் தோல் கூட யாருக்கும் கோவணமாகப் போவதில்லை.

நிலையாமையே நிலையானது என்பதை அவனது மரணப் படுக்கை காட்டுகின்றது.

இந்த சடலத்தை நீங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளவே அந்தக் குத்து விளக்குகள் எரிகின்றன. பிறந்த விளக்கு அணைந்து கிடப்பதைச் செய்யப்பட்ட விளக்குகள் காட்டிக் கொண்டிருக்கின்றன.
மரணத்தில் அடங்கியுள்ள தத்துவத்தை அவை பறை சாற்றுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் குடும்பச்சோலையில் குருத்தாக முளைத்து தீராநோயதனில் கருகிப்போன அமரர் கை.கமலநாதனின் இழப்பினால் தவித்த எம் மனச்சுமையை தாங்களும் பகிர்ந்து கொண்டு, ஆறுதல் வழங்கிய அனைத்து உறவுகளிற்கும் எம்சிரம் தாழ்ந்தநன்றிகள்!

மலேசியாவில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து ஒத்தாசை புரிந்தோருக்கும், வட்டக்கச்சி, முனீஸ்வரம் கொழும்பு மற்றும கனடாவில் ஒன்றுகூடி கண்ணீர்க் காணிக்கை செலுத்திய உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக!

விசேடமாக அன்னார் நோயுற்றிருந்தகாலத்தில் மருத்துவ உதவிகளை வழங்கிய மலேசிய UM பல்கலைக்கழக மருத்துவ மனைமருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கும், அந்நிய நாட்டில் உற்ற துணையாயிருந்து உதவி புரிந்த மலேசிய நண்பர்களுக்கும், மகாயுகம் நன்றிகள்!

தொலைபேசிவழியாகவும், கண்ணீர் அஞ்சலிகள் வாயிலாகவும், தங்கள் துயரைப்பகிர்ந்து கொண்டு ஆறுதலளித்தவர்களுக்கும், அந்தியேட்டிக்கிரியைகளில் பங்குற்றோருக்கும், கமலநாதம் எனும் இந்நினைவுமலரை தயாரிக்க உதவியவர்களுக்கும் மற்றும் அச்சிட கொலம்பியா அச்சகத்தாருக்கும், பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் சொல்லில் அடங்காத இன்னும் பலருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி**

**குடும்பத்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச

(நெடுந்தீவு)

உ வைத்திலிங்கம் + உ நாகாத்தைப்பிள்ளை

- உ சபாரட்ணம்
- கைலாயபிள்ளை
- உ குமாரசாமி
- சுப்பிரமணியம்
- கதிரவேலு
- குணநாயகி
- யோகம்மா
- தையல்நாயகி
- பொன்னம்மா

(அனலைதீவு

உ சுப்பிரமணியம் + உ ந


- உ பூபாலபிள்ளை
- உ யோகம்மா
- உ ஆறுமுகம்
- செல்லம்மா
- தங்கம்மா
- உ வள்ளியம்மை

கைலாயபிள்ளை + தங்கம்மா

- கிருஷ்ணவேணி + திருநாவுக்கரசு
  - கலாஜினி + நந்தகுமார்
    - ஹர்ஷினி
    - சுலக்சனா
  - ரமணன் + சுசானா
    - நேடன்
  - சுபாஜினி
- ரகுநாதன் + உமாதேவி
  - அனித்தா
  - சுகிர்தா
- சேதுநாதன் + சறோஜினிதேவி
  - டினேஷ்
  - பிரவீன்
- தனலட்சுமி + பற்குணசிங்கம்
  - பிரசாத்
  - கஸ்தூரி
- வசந்தவேணி + சபாரெத்தினம்
  - ஷாலினி
  - ஷாமினி
  - ஷர்மினி
- **கமலநாதன**
  - ரவீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GEETHA SAARAM



Whatever happened was good.
Whatever is happening is good.
Whatever will happen, will also be good.
What of yours has gone to make you cry?
What did you bring with you that you have lost?
What did you created, which is now destroyed?
What you have taken you has taken only from here.
What was given was given only from here.
What is yours today was someone else's yesterday.
Change is the law of the Nature.

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது!
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது!
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்!
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகின்றாய்?
எதைக் கொண்டு வந்தாய்? அதை இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாக்குவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது!
எதைக் கொடுத்தாயோ அது
இங்கேயே கொடுக்கப்பட்டது!
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது!
மற்றொரு நாள் அதுவே வேறொருவருடையதாகும்!



**இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாரம்சமும் ஆகும்!**
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Golumbia Printing 905-488-1000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org